**செய்தி வெளியீடு எண்: 398** **நாள்: 21.06.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லியில் 9 கோடியே 4 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 73 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 18 கோடியே 32 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 46 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையங்கள், 7 காவல்துறை கட்டடங்கள், 7 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லியில் 9 கோடியே 4 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 73 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், பெரம்பலூர் மாவட்டம் – பாடலூரில் 3 குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – முன்னீர்பள்ளத்தில் 23 குடியிருப்புகள் மற்றும் வேலூர் மாவட்டம் – திம்மம்பேட்டையில் 20 குடியிருப்புகள், என மொத்தம் 6 கோடியே 18 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 46 காவலர் குடியிருப்புகள்;

அரியலூர் மாவட்டம் – அரியலூர் போக்குவரத்து காவல் நிலையம்; கடலூர் மாவட்டம் – கம்மாபுரம் காவல் நிலையம், காஞ்சிபுரம் மாவட்டம் – மகாபலிபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையம், இராமநாதபுரம் மாவட்டம் – திருவாடானை அனைத்து மகளிர் காவல் நிலையம், திருவள்ளூர் மாவட்டம் – கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி அனைத்து

மகளிர் காவல் நிலையம், ஆகிய இடங்களில் 2 கோடியே 68 லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 காவல் நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூரில் போதைப்பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவுக்கான சேமிப்புக் கிடங்கு, மதுரை மாவட்டம் – மேலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் – கோட்டைப்பட்டிணம் ஆகிய இடங்களில் துணை காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள், திருப்பூர் மாவட்டம் – திருப்பூரில் ஊர் காவல் படை அலுவலகம், திருவாரூர் மாவட்டம் – திருவாரூரில் சிறப்பு புலனாய்வுத் துறை அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் – பழவேற்காடு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் – சதுரங்கபட்டிணம் ஆகிய இடங்களில் கடலோர காவல் நிலையங்கள், என மொத்தம் 2 கோடியே 15 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 காவல்துறை கட்டடங்கள்;

நாமக்கல் மாவட்டம் – குமாரபாளையம், விருதுநகர் மாவட்டம் – வெம்பக்கோட்டை, கோயம்புத்தூர் மாவட்டம் – கிணத்துக்கடவு மற்றும் சூளூர், தூத்துக்குடி மாவட்டம் – ஒட்டப்பிடாரம், திருவாரூர் மாவட்டம் – பேரளம், மதுரை மாவட்டம் – சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகம் ஆகிய இடங்களில் 7 கோடியே 29 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 7 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்;

என மொத்தம், 27 கோடியே 37 லட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல்துறை கட்டடங்கள் மற்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திரு. கே.பி. மகேந்திரன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.6.2018**